**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

*முனைவர் மா.ராஜவேல், Ph.D.*
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: 94890 56730*

*தொலைபேசி: 0422 - 6611302*
*நிகரி: 0422 - 2431821*
*மின்னஞ்சல்:pro@tnau.ac.in*

---

*பெறுநர்,*
*ஆசிரியர்,*
*ஐயா,*

*தேதி: 15.12.2025*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து இந்தியாவின் வளர்ச்சியில் உயிர் அறிவியலின் பங்கு என்ற தலைப்பில் கருத்தரங்கம்**

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து "இந்தியாவின் வளர்ச்சியில் உயிர் அறிவியலின் பங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்கம் 13.12.2025 அன்று நடத்தியது. திரு. தினேஷ் ராஜு, மேலாளர், ABT இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் PMO, அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் 150–க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல், உயிரி தகவலியல் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

உயிரி அறிவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படும்போது எவ்வாறு தேசிய முன்னேற்றத்திற்கு உந்துசக்தியாக மாறும் என்பதை குறித்தும், ஆயுர்வேதத்தில், தரவு சார்ந்த அணுகுமுறைகள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் சான்றுகள் சார்ந்த சரிபார்ப்பு ஆகியவை பாரம்பரிய சுகாதார அமைப்புகளின் உலகளாவிய ஏற்றுக்கொள்ளலை மேம்படுத்தக்கூடிய வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டலில் வளர்ந்து வரும் தாக்கத்தை அவர் விரிவாகக் கூறினார்.

மாணவர்களுடனான கலந்துரையாடலில் போது மருத்துவம், தரவு பகுப்பாய்வு, உயிரித் தகவலியல், டிஜிட்டல் சுகாதாரம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள், அதனை சார்ந்த பல்வேறு வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார். வளர்ந்து

வரும் வேலைச் சந்தையில் போட்டித்தன்மையுடன் இருக்க, பல்வேறு துறைகளுக்கு இடையேயான திறன்களை வளர்த்துக் கொள்ள மாணவர்களை அவர் ஊக்குவித்தார். மேலும், உயிரி அறிவியலில் தொழில்முனைவோரை ஆதரிக்கும் அரசாங்கக் கொள்கைகள் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கினார்.

மருந்துத் துறைக்கான அரசாங்க ஆதரவு, உயிரி தொழில்நுட்பத்தில் நெறிமுறை பரிசீலனைகள், இறக்குமதி குறைப்பு உத்திகள் மற்றும் நானோதொழில்நுட்பத்தின் எதிர்கால வாய்ப்புகள் தொடர்பான கேள்விகளுக்கு திரு. தினேஷ் ராஜு அவர்கள் பதிலளித்தார்.

தொடக்க நிகழ்வில் முனைவர். ராஜகோபால் இணை பேராசிரியர், தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, TNAU, கோயம்புத்தூர் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர். பாரதி இணை பேராசிரியர் தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**